உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 01 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரா ரெவண ரோவெனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே.

வினாத்தொகுதி:01

(i) பாடலின் வந்துள்ள மேல்வரும் தொடர்களுக்கான பொருளை எழுதுக.

- நசைஇ - விரும்பி
- நகுமே - சிரிக்குமே
- பெயல் - மழை
- முகை - அரும்பு

(04 புள்ளிகள்)

(ii) பாடலில் வெளிப்படும் தலைவியின் பிரிவுத் துயரினை எடுத்துக்காட்டுக.

* தன்னுடையதும் என்னுடையதுமான இளமைப் பருவத்தின் அருமையைக் கருதாது தலைவன் பிரிந்து சென்றது பொருள்மூலம் வரும் வளமான வாழ்க்கையை விரும்பியே ஆகும். எனினும் அப்பிரிவு தலைமகளுக்கு துயருடையது ஆயிற்று
* தலைவன் தலைமகளுக்கு குறித்துச் சொன்ன கார்காலம் வந்துவிட்டது. ஆனால் அவன் இன்னும் வரவில்லை. இங்கு இளமை என்பது நிலையில்லாதது. போனால் மீளப் பெறமுடியாது ஆனால் பொருள் எக்காலத்திலும் தேடக் கூடியது. இளமை உள்ள காலத்தில் அனுபவிக்க வேண்டிய வாழ்க்கையை விட்டுவிட்டு பொருளைத்தேடி இளமை கழிந்த பிக் வந்து எதை அனுபவிக்கப் போகிறான்.என்று ஏங்குகின்ற நிலையில் உள்ளாள்.
* தலைவனின் அறியாமை குறித்து தான் மட்டுமல்ல இயற்கை நிகழ்வாகிய கார்காலம் கூட சிரிப்பதாக தன் கருத்தை ஏற்றிச் சொல்லும் அளவிற்கு தலைவி தன்துயரை தோழிக்குக் கூறி துன்புறுகிறாள். (04 புள்ளிகள்)

(iii) பாடலில் கையாளப்பட்டுள்ள முதல், கரு, உரிகளை எடுத்துக்காட்டுக.

* முதல் :நிலத்தில் முல்லை நிலமும் பொழுதில் கார் காலமும் இப்பாடலில் வெளிப்படுகின்றன.
* கரு : முல்லைக் கொடியின் முகையும் அது பூத்திருக்கும் நிலையும் கார்கால மழையும் எனும் இயற்கைப் பொருட்கள் இதில் உள்ளன.
* உரி : தலைவனின் வருகைக்காக தலைவி காத்திருக்கும் இருத்தல் ஒழுக்கம் இதில் உள்ளது.

(04 புள்ளிகள்)

www.lkedu.lk

<u>வினாத்தொகுதி:02</u>

(i) பாடலின் பேசு பொருள் (துறை) யாதெனக்குறிப்பிடுக.

- பொருளீட்டச் சென்ற முல்லைத் தலைமகன் குறித்த பருவத்தில் வராமை கண்டு வருந்தியழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(04 புள்ளிகள்)

(ii) கையாளப்பட்டுள்ள ஏகதே உருவக அணியினை எடுத்துக்காட்டுக.

* ஒரு செய்யுளில் புலவர் ஒரு பொருளை உருவகம் செய்துவிட்டு அதற்கு தொடர்புடைய மற்ற பொருளை அதற்கேற்ப உருவகம் செய்யாமல் விட்டுவிட்டால் இதுவே ஏகதேச உருவக அணியாகும்.
* இப்பாடலில் ''முல்லைத் தொகுமுகை இலங்கையிறாக நகுமே தோழி நறுந்தன் காரே'' என்பதில் முல்லைப் பூக்களின் மொட்டுக்களை பெண்ணின் பற்களாக உருவகம் செய்த புலவர் கார்காலத்தை ஒரு பெண்ணாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டதால் இது ஏகதேச உருவக அணியாகும்.

(04 புள்ளிகள்)

(iii) கார்காலம் பற்றி குறிப்பிடப்படும் செய்திகள் யாவை?

* கார்காலம் என்பது தாவரங்கள் துளிர்த்து செழித்து பூப்பூக்கின்ற இதமான காலம் இப்பாடலில் மழையும் முல்லைக் கொடியின் முகயும் (அரும்புகள்) இக்காலத்தை நினைவுறுத்துகின்றன.
* முல்லை மலர் நறுமணம் மிக்கது. மழை குளிர்மை மிக்கது. இவ்விரண்டும் கார்காலத்திற்கு உரியவை. அவை தலைவனை விட தலைவியை இன்ப நுகர்ச்சியின் பால் ஈர்க்கின்றன.

(04 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:03</u>

(i) பாடலில் வெளிப்படும் நிலையாமைக்கருத்தினை எடுத்துக்காட்டுக.

* இளமைக்காலம் நிலையில்லாதது
* இளமை கழிந்தால் திரும்பவும் பெறமுடியாதது

(04 புள்ளிகள்)

(ii) பாடல் புலப்படுத்தும் சங்க இலக்கிய பண்புகளை எடுத்துக்காட்டுக.

* அகத்திணையில் காதலின் இருத்தல் ஒழுக்கம் பேசப்படுகிறது.
* முதல், கரு, உரி எனும் மூன்று அம்சங்களும் உள்ளன.
* ஒரு பாடலில் ஒரு ஒழுக்கம் எனும் முல்லை நில இருத்தல் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது.
* வடமொழி கலப்பில்லாத சிறியனவும் ஆகிய சொற்கள் கையாளப்பட்டுள்ளன.
* நாடகப் பாங்கில் பெயர் சுட்டாத தலைவி கூற்றுப் பாடலாக அமைந்துள்ளது.
* தொகைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொகுமுகை (வினைத்தொகை) பூங்கொடி (வேற்றுமைத் தொகை)

(04 புள்ளிகள்)

(iii) பாடலில் புலவன் கையாண்டுள்ள தற்குறிப்பேற்ற அணியினை எடுத்துக்காட்டுக.

- முல்லை மலர்கனின் அரும்புகள் வெளித்தள்ளியவாறு மலர்ந்திருப்பது இயல்பான செயலாகும்.இங்கு புலவர்,முல்லைமலரை பற்கள் வெளியே தெரியும்படியாக நகைக்கும் மனிதராக தன்குறிப்பை ஏற்றி குறிப்பிட்டுள்ளார்.

(04 புள்ளிகள்)

www.ikedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 02 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே.

வினாத்தொகுதி:01

(i) பாடலின் பேசு பொருளை (துறை) குறிப்பிடுக.

* தலைவியோடு கொண்ட உறவை மறவாது அவளை விரைந்து வந்து மணம் செய்து கொள்ளுமாறு தோழி தலைவனுக்கு வற்புறுத்தல்.

(04 புள்ளிகள்)

(ii) மேல்வரும் சொற்களுக்கான பொருனை எழுதுக.

* முன்றில் - முற்றம்
* கெட்டித்து - கேடு நேர்ந்த இடத்து,
* கலிமயில் - ஆரவாரம் மிக்க மயில்
* கலாபம் - தோகை, பீலி,

(04 புள்ளிகள்)

(iii)"தலைவன் தலைவியை விட்டு பிரிதல் அறமன்று" எனும் கருத்து தொணிக்குமாற்றினை எடுத்துக்காட்டுக.

* தான் பலமிழந்து இருந்த காலத்தில் பிறரின் உதவியைப் பெற்று அரசு கட்டில் ஏறிய பின், தனக்கு முன்னர் உதவியவர்களை மறந்து விடுகின்ற மன்னர்களைப் போல நீ நன்றி மறந்தவனாக அமையவில்லையெனில் தலைவியின் நலமெல்லாம் (கூந்தல் முதலிய எல்லாம்...) உனக்கே உரியதாகும். எனும் தோழியின் அறிவுரையில் **தலைவன் தலைவியை விட்டு பிரிவது அறமன்று** என்ற கருத்து தொனிக்கின்றது. எனவே நன்றி மறவாது செயற்படுவதே உயர்ந்த அறமாகும்.

(04 புள்ளிகள்)

வினாத்தொகுதி:02

(i) பாடலில் கையாளப்பட்டுள்ள உவமை அணியினை எடுத்து விளக்குக.

* உவமை : ''கலிமயிற் கலாவத் தன்ன இவள் ஒலி மெல் கூந்தல்''

www.lkedu.lk

உவமானம் : கலிமயிற் கலாவம் : மென்மையானதும் ஆரவாரிக்கும் தன்மையானதுமான மயிலின் பீலி (இறகு) உவமேயம் : ஒலி மேல் கூந்தல் : தலைவியின் தழைத்து செழித்த நீண்ட கூந்தல் பொதுத் தன்மை : மென்மையும் தழைத்து செழித்து நீண்டிருக்கும் அழகும்.

* அரசன் ஒருவன் பலமிழந்திருந்த காலத்தில் பிறரின் உதவியைப் பெற்று அரசு கட்டில் ஏறிய பின் தனக்கு முன்பு உதவியவர்களை மறந்துவிடும் மன்னன் போல என **உவமை** நன்றி மறந்தவனாக தலைவன் தலைவியை விட்டுப் பிரிவது அறமன்று என்பது புலப்படுத்தப்பட்டது.

(04 புள்ளிகள்)

(ii) தலைவனின் மன நிலையினை எடுத்துக்காட்டுக.

- தலைவன் தன் சுற்றத்தை பயன்பட வாழ வைப்பதுடன் தலைவியின் அழகை அளவாக தானும் அனுபவிக்கும் எண்ணம் தொனிக்கின்றது.
- தனக்கு இன்பம் வழங்கியவர்களை நன்றி மறந்தவனாக தலைவன் காணப்படுவது.

(04 புள்ளிகள்)

(iii) பாடலில் கையாளப்பட்டுள்ள முதல்,கரு,உரிகளை எடுத்துக்காட்டுக.

- முதல்: மலைசார்ந்த குறிஞ்சி எனும் நிலம்
- கரு: யானை, திணை, மயிலின் பீலி முதலிய கருவும்
- உரி: குறிஞ்சி நிலத்துக்குரிய புணர்தல் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது.

(04 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:03</u>

(i) <u>தோழியின் மதி நுட்பம் இப்பாடலில் எவ்வாறு துலக்கம் பெறுகின்றதெனக்குறிப்பிடுக.</u>

* **தலைவனின் ஆற்றலை யானையின் செயலுக்கு உவமித்து இறைச்சியூடாக** குறிப்பின் மூலம் அவன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளாள்.
* தலைவன் நன்றி மறக்காது தனக்குரிய கடமையினை செய்ய வேண்டுமென்று தனது கருத்தை வலியுறுத்துவதாக தோழியானவள் **உவமை மற்றும் இறைச்சி** என்பவற்றை கையாண்டு விளக்கியுள்ளாள்.
* பெண்யானை முற்றத்து தினையை தின்றபடியே தன் கன்றுக்கும் பாலூட்டுகிறது. அங்கனமே தலைவனாகிய நீயும் 'பொருள் தேடி தன் உறவுகளை போசித்து பாதுகாத்து கடமையை நிறைவேற்றுவதோடு இவளது நலனையும் பேண வேண்டும்' எனனும் **குறிப்பு தோன்ற** வலியுறுத்துகிறாள்.
* தலைவனே நீ இதுவரை தலைவியுடன் அனுபவித்த நலன்களை மறந்தவனாக அவளை விட்டுச் சென்று விடாமல் அவளை மணமுடித்து இல்லறம் நடத்துவாயாயின் அவள் மகிழ்வாள். அழகோடு துலங்குவாள் அவளது அழகு உனக்கு உரியதாய் அமையும். எனினும் நீ பிரிவாயாயின் அவள் துன்புறுவாள். அழகு இழப்பாள். அவளது அழகு உனக்கு உரிமை இல்லாததாக ஆகிவிடும் என்று **அழகைகை அனுபவிக்கும் உரிமையைச் சுட்டுகிறாள்.**
* அரசன் ஒருவன் பலமிழந்திருந்த காலத்தில் பிறரின் உதவியைப் பெற்று அரசு கட்டில் ஏறிய பின் தனக்கு முன்பு உதவியவர்களை மறந்துவிடும் மன்னன் போல என **உவமை கூறி**, நன்றி மறந்தவனாக நீ அமையவில்லை எனின் தலைவியின் நலமெல்லாம் உனக்கு உரியதாகும். எனும் தோழியின் அறிவுரையில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிவது அறமன்று என்ற கருத்து தொனிக்கின்றது. இதன் மூலம் தலைவன் தலைவியை விரைவாக திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவனது கடமையினையும் பொறுப்பையும் வலியுறுத்துகிறாள்.

(04 புள்ளிகள்)

www.ikeu.lk

(ii) பாடலில் இறைச்சி பொருள் விளக்கப்பட்டுள்ளவாற்றை எடுத்துக்காட்டுக.

* ''கன்றுதன் பயமுலை மாந்த முன்றில் திணை பிடி உண்ணும் பெருங்கல் நாட'' : பெண் யானை தன் கன்றுக்கு பால் கொடுத்து தானும் திணைக்கதிர்களை உணவாக உண்டு தன் பசியை போக்குகின்றது.

இறைச்சியின் பண்புகள்	**வெளிப்படும் பண்புகள்**
பறவை, விலங்கு முதலிய உயிரினங்களின் செயல் மூலம் ஒரு குறிப்பை உணர்த்துவது	பெண் யானையின் செயல்
தலைவனின் கொடுமை, இயல்புகள் கூறும் இடங்களில் பயன்படுவது	தலைவன் தன் சுற்றத்தை பயன்பட வாழ வைப்பதுடன் தலைவியின் அழகை அளவாக தானும் அனுபவிக்கின்றான் எனும் தலைவனின் பெருமை தொனிக்கின்றது.
ஒன்றைச் சொல்லும் போது இன்னொன்று நினைவுக்கு வரும்	யானையின் செயல் கூறல் : தலைவன் பொருளீட்டுவதுடன் தலைவியின் நலனையும் பேணி அவளையும் திருமணம் செய்ய வேண்டும்
மன ஆசையை ஆற்றாமையை வெளிப்படுத்தும் நோக்கம் உள்ளது.	தலைவன் தலைவியை விரைந்து வரைந்து கொள்ள (திருமணம் செய்தல்) வேண்டும்
கேட்போர் இல்லாத சூழலில் பயன்படுத்தப்படுவது	தலைவி இவ்விடத்தில் இல்லாதபோது தலைவனுக்கு கூறப்பட்டது.

(04 புள்ளிகள்)

(iii)இப்பாடலில் வெளிப்படும் சங்க இலக்கியப் பண்புகளை எடுத்துக்காட்டுக.

* குறிஞ்சி நிலத்துக்குரிய புணர்தல் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது.
* குறிஞ்சி எனும் முதலும் யானை, திணை, மயிலின் பீலி முதலிய கருவும் புணர்தல் எனும் உரியும் வெளிப்படுகிறது.
* திருமணத்தை முன்னிறுத்தி தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனுக்கு தோழி சொல்லிய துறை.
* பெயர்சுட்டாத தோழி கூற்றாகவும் அமைந்துள்ளது.
* இறைச்சி எனும் குறிப்பும் பொருளும் பயன்படுத்தப்பட்டது. பெண்யாணை கன்றுக்குப் பாலூட்டியவாறு தினையை உண்பது போல தலைவனும் தலைவியின் நலனைப் பேணி அவளை விரைவாக மணம் முடிக்க வேண்டும்.
* ''நன்றி மறவாது செயற்படுவதே உயர்ந்த அறமாகும்'' எனும் அறக்கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.
* ஒரு பாடலில் ஒரு ஒழுக்கம் எனும் குறிஞ்சி நிலத்திற்குரிய புணர்தல் ஒழுக்கம் தனியொரு செய்யுளில் கூறப்பட்டுள்ளது.
* அகவல் பாவால் ஆன ஏழு அடிகள் உள்ள (சீர்கள்) பாடலாக அமைந்துள்ளது.

(04 புள்ளிகள்)

www.lkedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 03 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉ நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி அல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

வினாத்தொகுதி:01

(i) கவிஞர் கூறவிளைந்த பேசுபொருளை(துறை)விளக்குக.

* 'பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் திரும்பி வந்து திருமணம் செய்யும் வரையிலான காலத்தில் பிரிவுத் துயரினை தலைவி தாங்கமாட்டாள்' என கருதி வருந்திய தோழியை நோக்கி, தனது நிலைமையை கழிவிரக்கத்தோடு தலைவி கூறியது

(04 புள்ளிகள்)

(ii) பாடலினூடாக தலைவியின் துயர் வெளிப்படுமாற்றினை எடுத்துக்காட்டுக.

* தலைவனைப் பிரிந்ததால்தான் தன் அழகுநலன்கள் குன்றியதாக வருந்துதல்.
* பிரிவதற்கு முன் தலைவனும் தலைவியும் அளவளாவி சிரித்து மகிழ்ந்தமையை எண்ணி வருந்துதல்.
* ''அல்கலும் தயங்குதிரை பொருத..'' எனும் வரியூடாக இரவுப் பொழுதில் தலைவி பிரிவுத் துயரால் அதிக துயர் அடைவதாக குறிப்பால் உணர்த்தப்படுகின்றது.
* தன் துயரத்தை தோழிக்கு கூறுவதன் மூலமாகவும் தன் துயர் பகிர்தலை மேற்கொள்கிறாள்.

(04 புள்ளிகள்)

(iii) பாடலில் கையாளப்பட்ட உள்ளுறை உவமத்தை எடுத்து விளக்குக.

* தாழையின் வெண்ணிறமான பூக்கள் வெண்ணிறமான கடற்பறவைகள் போல தோன்றுகின்றன என்பதன் மூலம் தாழம் பூக்களை கடற்பறவைகள் எனக் கருதி அவற்றை பிறர் கொய்து பயன் கொள்ளாதது போல தலைவனும் தலைவியின் உண்மை நிலையினை உணராது திருமணம் செய்யாது அவளது அழகையும் வாழ்க்கையையும் வீணாக்குகிறான் என்பது குறிப்பாக உணர்த்தப்பட்டது.

* ''அல்கலும் தயங்குதிரை பொருத தாழை வெண்பூ'' என்பதன் மூலம் தலைவி,இரவு தோறும் விரக வேதகையால் அலைக்கழிக்கப்படுவதும் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

(04 புள்ளிகள்)

www.keu.lk

வினாத்தொகுதி:02

(i) பாடல் வெளிப்படுத்தும் பிரதான செய்தியை எடுத்துக்காட்டுக.

* நெய்தல் நிலத்து தலைவனான சேர்ப்பனோடு அளவளாவி சிரித்து மகிழ்வதற்கு முன்பு தலைவியின் கண்ணும் தோளும் நெற்றியும் நல்லவனாய் பொலிவுடன் விளங்கின. ஆனால் அவன் பிரிந்து சென்றபின் அவை முன்பு போல் இராது பொலிவிழந்து விட்டன. என்பதால் தலைவனின் பிரிவினால் தலைவியின் அழகு அழிந்தது எனலாம்.

(04 புள்ளிகள்)

(ii) பாடலில் புலவர் தம் கருத்தை வெளிப்படுத்த கையாளும் உத்திகளை எடுத்து விளக்குக.

* தலைவனைப் பிரியமுன் இருந்த தலைவியின் அழகினை பூவை ஒத்த கண்கள் எனவும் மூங்கிலைப் போல அழகும் வெற்றியும் வலிமையும் பெற்ற தோள்கள் எனவும் பிறையைப் போன்ற கண்டார் அறிவை மயக்கச் செய்யும் நெற்றி எனவும் வர்ணித்தமை.

* கடற்கரையிலுள்ள தாழையின் வெண்ணிறப் பூக்களை நாரைகள் என நினைத்து, பிறர் கொய்யாது விடுதல் போல தலைவியின் உண்மை நிலையினை உணராத தலைவன் அவளைத் திருமணம் செய்யாது அவளின் அழகையும் வாழ்வையும் வீணாக்குகின்றான் எனும் உள்ளுறை உவமை மூலம் இக்குறிப்பு பொருளை உணர்த்தியமை.

* அலைகளால் மோதப்பட்ட தாழையினது வெண்பூ நாரையைப் போல மலர்ந்து தோன்றும் பெருந்துறைகளைக் கொண்ட அகன்ற நீர்ப்பரப்பை உடைய சேர்ப்பன் என விழித்து, நெய்தல் நிலச் சம்பவத்தை காட்சியாக்கி காட்டியமை.

(04 புள்ளிகள்)

(iii) பாடலில் துலங்கும் நெய்தல் நிலச் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.

* அகன்ற நீர்ப்பறப்பை உடையது என்பது 'பெருந்துறை விரிநீர்' என சிறப்பிக்கப்பட்டது.
* நீண்டு வளர்ந்த தாழை மரங்களில் வெண்ணிறப் பூக்கள் மலர்ந்திருப்பதும் நாரை தங்கியிருப்பதுமான துறை.
* நெய்தல் நிலத் தலைவன் சேர்ப்பன் என வழங்கப்படுகிறான்.

(04 புள்ளிகள்)

வினாத்தொகுதி:03

(i) பாடலின் திணையையும் துறையையும் குறிப்பிட்டு விளக்குக.

- **திணை:** நெய்தல்.
- **துறை கூற்று:** வரைவிடை(திருமணத்துக்கு முன்) ஆற்றாள்(தாங்கமாட்டாள்) எனக் கவன்ற(வருந்திய) தோழிக்குக் கிழத்தி (தலைவி) உரைத்தது.

(ii) தலைவியை தாழம்பூவாக புலவர் குறிப்பிட்டதன் பொருத்தப்பாட்டை ஆராந்து குறிப்பிடுக.

தாழம்பூ	**தலைவி**
வெண்மை நிறமானது	வெண்மை நிறமானவள்
கவர்ச்சியானது	கண், தோள், நெற்றி என்பவற்றால் கவரக்கூடியவள்
வாசனை மிகுந்தது	வாசனை மிகுந்தவள்
தன் பூப் பாரத்தால் வழைந்திருப்பது	தன் அழகிய உறுப்புக்களால் வழைந்திருத்தல்
அழகும் மென்மையும் வாய்ந்தது	அழகும் மென்மையும் உள்ளவள்
அலைகளால் அலைக்கழிக்கப்படுவது	தலைவனால் அலைக்களிக்கப்படுவள்
சூடிக்கொள்ளாத பூ	பயன்படுத்தாமல் அழகை அனுபவிக்காமல் விடுதல்

(04 புள்ளிகள்)

www.ikeu.lk

(iii) தலைவியின் அழகு நலன்களாக பாடலில் குறிப்பிடப்படுவனவற்றை எடுத்து விளக்குக.

* தலைவியின் கண்கள் மலரைப் போல (தாமரை) விளங்குவதால் அழகும் கவர்ச்சியும் உடையது.
* அவளது தோள்கள் மூங்கிலைப் போல வழுவழுப்பான தன்மையும் அழகும் வெற்றியும் வலிமையும் பெற்றனவாக விளங்குகின்றன.
* தலைவியின் நெற்றி காண்போரின் அறிவை மயக்கச் செய்யும் பிறை என்று சொல்லும்படியாக விளங்கியது.

(04 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:04</u>

(i) இப்பாடலில் மேல்வரும் சொற்கள் எவ்வெப் பொருள்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- விறல் வனப்பு - பிறிதொன்றிற்கும் இல்லாத பேரழகு
- சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்
- தயங்கல் - ஒளி செய்தல்
- நகுதல் - சிரித்தல் (இங்கு கூடி மகிழ்தலைக் குறிக்கிறது)

(04 புள்ளிகள்)

(ii) "தயங்கு நிரை பொருத தாழை வெண்பூக் குருகு என மலரும்" எனும் தொடரின் ஊடாக சித்திரிக்கப்பட்ட விடயத்தை எடுத்துக்காட்டுக.

- தாழையினது வெண்ணிறப் பூ நாரையைப் போல பெருந்துறையில் பூத்துள்ளது. அதனைக் குருகு என மயங்கி ஒருவரும் பறிக்க முயலாமல் அதன் வாழ்வு கழிவது போல, தலைவனால் இன்பம் அனுபவிக்கப்படாது வாழும் தலைவியின் நிலை குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது.

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடலில் வெளிப்படும் சங்ககால அகத்திணைப் புண்புகளை எடுத்துக்காட்டுக.

* முதல் எனும் நெய்தல் நில கடற்துறையும் கரு எனும் தாழையும் நாரையும், தாமரையும், மூங்கிலும், சேர்ப்பனும் உரி எனும் இரங்கலும் அமையப் பெற்றது.
* "தயங்குதிரை பொருதாழை வெண்பூக் குருகென மலரும் பெருந்துறை" எனும் தொடரில் உள்ளுறை உவமைக் குறிப்பு பயன்படுத்தப்பட்டது.
* நாடகப் பாங்கு: தலைவி கூற்றாக பெயர் சுட்டாமல் அமைந்துள்ளது.
* அகவற்பாவால் ஆன ஏழு அடிகளை உடையது.
* பிரிவுத்துயரை தாங்காள் என கவலையுற்ற தோழிக்கு தலைவி கூறிய துறையாக அமைந்துள்ளது.

(04 புள்ளிகள்)

www.kedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 04 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) வாரலெஞ் சேரி தாரனின் றாரே

அலரா கின்றாற் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் றந்தை
அரியலம் புகவினங் கோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலம் தொலைவன கண்டே.

வினாத்தொகுதி:01

(i) இப்பாடல் இடம்பெறும் துறையை விளக்குக.

* வாயில் நேர்ந்தது: கூற்று - 1: தோழி, தலைமகற்கு வாயில் மறுத்தது.பரத்தையிடம் சென்ற தலைவன், தலைவியிடம் வந்து கபாடம் (கதவு,கடை) திறக்கக் கேட்டல்.
* வாயில் மறுத்தது: கூற்று - 2: தோழி, தலைமகற்கு வாயில் நேர்ந்தது. தலைவன் - தோழி ஊடல் கொண்டு கடை திறக்க மறுத்தல்.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலூடாக தோழி, தலைவனுக்கு உரைக்கும் செய்திகள் யாவை?

* தலைவியின் குற்றமற்ற அழகு நலங்கள், தலைவனாகிய நீ பரத்தையிடத்து சென்றதால் இழந்தன.
* அழகுள்ள தலைவியை விட்டு நீ பிரிந்து, பரத்தையிடம் சென்றதால் 'என்ன நலம் கண்டாய்' என குறிப்பால் வினவுதல்.
* சேரிப் பக்கம் வருவதை விடுப்பாய்; உன் மாலையைத் தருவதையும் ஒழிப்பாய் என்று தலைவியின் ஊடலையும் புலப்படுத்தியமை.
* தலைவி ஊரவரின் பழி மொழிக்கு அஞ்சியதாக குறிப்பிடுகின்றாள்.

(04 புள்ளிகள்)

(iii) இச் செய்யுளில் வெளிப்படும் பழந்தமிழ்கால இலக்கிய மரபுகளைக் குறிப்பிடுக.

* மருத திணைக்குரிய ஊடல் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது.
* தோழிக் கூற்றாக பெயர் சுட்டா மரபாக அமைந்தது.
* கருப் பொருட்களான மருத மரம், யானை, ஆர்காடு, நகரம், சேரி என்பன அமையப் பெற்றுள்ளன.
* அகத்திணைக்குரிய இப் பாடலில் சேந்தன், அழிசி ஆகிய இரு மன்னர்களின் வீரமும் பெயர் சுட்டி பாடப்பட்டுள்ளது.
* குறிஞ்சித் திணைக்குரிய கருப் பொருளாகிய யானை இம் மருதத் திணையில் குறிப்பிடப்பட்டு திணை மயக்கமாக அமைந்தது.
* குறிஞ்சி நிலத்து யானை மருத நிலத்து மருத மரத்தில் காட்டப்பட்டுள்ளது போல் தலைவன் தனக்குரிய தலைவியோடு வாழாமல் பரத்தையால் கவரப்பட்டு வாழ்ந்தான் என உள்ளுறை உவமை குறிப்பிடப்பட்டுள்ளது.

www.lkedu.lk

* மருத நிலத்திற்குரிய ஊடல் ஒழுக்கத்தின் நிமிர்த்தம் வருகின்ற அவர் தூற்றல், பரத்தை உறவு, வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் என்பனவும் இடம் பெற்றுள்ளன.
* விலங்கு வேட்டை, கள், இறைச்சி உணவு, யானை கடாவுதல், வாள்ப் போரிடல் எனும் சங்க கால பண்பாடுகளை வெளிப்படுத்துதல். **(யாதாயினும் நான்கு மட்டும்)**

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:02</u>

(i) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- வாரல் - வர வேண்டாம்
- தாரல் - தர வேண்டாம்
- நிரிய ஒள் வாள் - பகைவருக்கு நரக வேதனைச் செய்யும் ஒளி படைத்த வாள்,
- தொலைதல் - கெடுதல்,அழிதல், குறைதல்

(04 புள்ளிகள்)

(ii)இப்பாடலில் கையாளப்பட்டுள்ள உவமை அணிகளை எடுத்துக்காட்டுக.

- அழிசி என்பவனின் ஆர்க்காடு நகரம் தலைவியின் குற்றமற்ற மாட்சிமையுடைய நலன்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. உவமானம் - அழிசி என்பவனின் ஆர்க்காடு நகரம், உவமேயம் - தலைவி, பொதுத்தன்மை - பேரளவு சிறப்பு
- பகைவருக்கு நரகம் போன்ற ஒளிபொருந்திய வாள் சிறப்பிக்கப்பட்டது. உவமானம் - நரகம், உவமேயம் - ஒளிபொருந்திய வாள், பொதுத்தன்மை - துன்பம் தருதல்

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடலில் காவிரி ஆற்றினதும் சோழநாட்டினதும் வளம் எடுத்துக்காட்டப்பட்டவாற்றைத் துலக்குக.

- காவிரி ஆற்று நீர்த் துறையில் மக்கள் எப்போதும் நீராடுவர்
- ஆற்றோரத்தில் மருத மரங்கள் வளர்ந்து நிறைந்திருத்தல்
- அம் மரங்களில் யானைகள் கட்டப்பட்டிருத்தல்

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:03</u>

(i) இப்பாடலில் கவிஞர் கூற விளைந்த பேசுபொருளை விளக்குக.

- பரத்தையிடம் சென்று வந்த தலைவன்மேல் தலைவி கொண்ட ஊடலை தோழி தலைவனுக்கு எடுத்துரைத்து தோழி தூதுக்கு உடன்படாதது.
- **தோழி கூற்றில் வாயில் மறுத்தது:** பரத்தையிடம் சென்ற தலைவன் தலைவியிடம் வந்து கதவு திறக்க கேட்டபோது தலைவனிடத்து ஊடல் கொண்டு (தலைவியும்,தோழியும்) கதவு திறக்க மறுத்ததாகும்.
- **தோழி கூற்றில் வாயில் நேர்ந்தது:** வராதீர் தார் தராதீர் எனினும் இவள் நலம் உமது பிரிவினால் துலைகின்றமையால் ஊரில் உள்ளோர் அவர் தூற்றுகின்றனர். எனவே தூது செல்ல உடன்படுகிறேன் என்பது வாயில் நேர்ந்ததாகும்.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- சேரி - தெரு, வாழிடம்
- அலர் - பழிச்சொல்
- அரியல் - கள்
- நிரையம் - நரகம்

(04 புள்ளிகள்)

www.kegl.lk

(iii) இப்பாடலில் பரணரால் கையாளப்பட்ட உத்திகளை எடுத்து விளக்குக.

* தலைவியின் கற்பு பழுதுபடாது நிற்கும் நிலையைக் கூறி தலைவனை நன்னெறியில் ஒழுகுமாறு தோழி பணித்தது வாயில் நேர்ந்த உத்தியாகும்.
* தலைவியின் அழகு நலன்கள் அழிதல் கண்ட பின்பாவவது எம் சேரிக்கு வருவதை நிறுத்திக் கொள்வாயாக உனது மாலையை தருவதையும் கைவிடுக உனது வருகையால் தலைவிக்கு பழி உண்டாகிறது என்பது வாயில் மறுத்த உத்தியாகும்.
* அழிசி என்பவனின் ஆர்க்காடு நகரம் தலைவியின் குற்றமற்ற மாட்சிமையுடைய நலன்களுக்கு ஒப்பிட்டு காட்டப்பட்டது.
* தலைவன் மாலையைத் தருவதால் பழிச்சொல் உண்டாகும் என்றும் பழிப்பிற்குரிய இழிந்த பரத்தையர் நலம் தோய்ந்த தலைவன் கற்பு பழுதுபடாது இருக்கும் தலைவியின் உடலை தொடாமல் நிற்கும் தலைவனின் இழி நிலையையும் தலைவியின் மாட்சிமையையும் புலப்படுத்த தோழி எனும் பாத்திரம் பயன்படுத்தப்பட்டது.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:04</u>

(i) இப்பாடலில் இடம் பெறும் உள்ளுறை உவமத்தை எடுத்துக்காட்டுக.

- மருதொடு பிணித்தஏந்துகோட் டியானை:குறிஞ்சி நிலத்திற்குரிய யானை மருத நிலத்தில் உள்ள மருத மரத்தில் கட்டப்பட்டுள்ளதைப் போல் தலைவன் தனக்குரிய மனைவியோடு வாழாமல் பரத்தையால் கவரப்பட்டு வாழ்ந்தான். என்பதைக் குறிக்கும்.

(04 புள்ளிகள்)

(ii) அழிசி,சேந்தன் ஆகிய மன்னர்கள் பற்றி இப்பாடலில் குறிப்பிடப்பட்ட செய்திகளை எடுத்துக்காட்டுக.

அழிசி எனும் மன்னன் பற்றிய செய்திகள்

* சேந்தனின் தந்தையாக விளங்குபவன்
* சோழருக்குரியவரான இவன் ஒரு பெரும் படைத் தலைவனாவான்.
* இவன் கள்ளை விரும்பி உண்பவன்
* விலங்கு கூட்டங்களை வேட்டையாடுபவன்
* இளம் வீரர்களின் தலைவன்
* பகைவரை அழிப்பதாகிய ஒளிபொருந்திய வாளினை உடையவன்
* இத்தகைய அவனது எழில் நிறைந்த நகராக ஆர்க்காடு நகர் விளங்குகிறது.

சேந்தன் பற்றிய செய்திகள்

* யானைகளைப் பிடிப்பதில் கை தேர்ந்தவன்.
* சோழர்களுக்காக காவிரிப் பெருந்துறை அருகே யானைகளை வசப்படுத்துபவன்.
* கொடைப் பொருநனாகிய கடியநெடு வேட்டுவன் போல ஒரு படைத் தலைவன்.

(04 புள்ளிகள்)

(iii)இச்செய்யுள் புலப்படுத்தும் சங்ககால பண்பாடுகளை எடுத்துக்காட்டுக.

* சங்கத் தமிழர்கள் விலங்குகளை வேட்டையாடுதல்
* இறைச்சியையும் கள்ளையும் உணவாக கொள்வர்
* வீரர்கள் யானைகளை வசப்படுத்தி பிடிப்பர்.
* பகைவருடன் வாள் போரிட்டு வெல்வர்

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ikeal.lk

வினாத்தொகுதி:05

(i) பாடலில் கையாளப்பட்டுள்ள முதல்,கரு,உரிகளை எடுத்துக்காட்டுக.

- **முதல்:** மருத குறிஞ்சி நிலத்து மரபுகள் கூறப்பட்டுள்ளன.
- **கரு:** கருப் பொருட்களான மருத மரம், யானை, ஆர்காடு, நகரம், சேரி என்பன அமையப் பெற்றுள்ளன. குறிஞ்சித் திணைக்குரிய கருப் பொருளாகிய யானை இம் மருதத் திணையில் குறிப்பிடப்பட்டு திணை மயக்கமாக அமைந்தது.
- **உரி:** மருத திணைக்குரிய ஊடல் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்து யானை மருத நிலத்து மருத மரத்தில் காட்டப்பட்டுள்ளது போல் தலைவன் தனக்குரிய தலைவியோடு வாழாமல் பரத்தையால் கவரப்பட்டு வாழ்ந்தான்.மருத நிலத்திற்குரிய ஊடல் ஒழுக்கத்தின் நிமிர்த்தம் வருகின்ற அவர் தூற்றல், பரத்தை உறவு, வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் என்பனவும் இடம் பெற்றுள்ளன.

(ii) பாடலில் கையாளப்பட்ட திணை மயக்கம் யாதெனக்குறிப்பிட்டு விளக்குக.

- **திணை மயக்கம்:** ஒரு திணைக்குரிய கருப்பொருள் மற்றொரு திணையில் வருவதனை தொல்காப்பியம் 'திணை மயக்கம்' என்கிறது.
- இப்பாடலில் முதற்பொருளாக காவிரியாற்றை சார்ந்த மருத நிலமும் கருப்பொருளாக மருத மரமும் உரிப்பொருளாக ஊடலும் குறிப்பிடப்பட்டுள்ளதால் இப்பாடல் மருதத்திணையை சார்ந்தது என்பது தெளிவு.
- எனினும் இப்பாடலில் குறிஞ்சி திணைக்குரிய கருப்பொருளாகிய யானை குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மயக்கம் இப்பாடலின் உள்ளுறை உவமத்தை புரிந்து கொள்வதற்கு உதவும்.
- ஊள்ளுறை உவமைக்குறிப்பு: தலைவன் தனக்குரிய மனைவியோடு வாழாமல் பரத்தையால் கவரப்பட்டு வாழ்ந்தான்.
- இக்கருத்து, தமிழறிஞர்கள் எழுதிய உரைநூல்கள் எவற்றிலும் காணப்படவில்லை. ஆனால், இது ஆங்கிலேயத் தமிழறிஞர் ராபர்ட் பட்லர் என்பவரால், அவருடைய குறுந்தொகையின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலில் கூறப்பட்டுள்ளது. இது தமிழ் இலக்கணத்திலும், சங்க இலக்கிய அகத்திணை நூல்களிலும் அவருடைய புலமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

(04 புள்ளிகள்)

(iii) "காவிரிப் பலராடு பெருந்துறை" ,"மருதொடு பிணித்த ஏந்துகோட்டி யானை "எனும் தொடர்கள் புலப்படுத்தும் உட்கருத்துக்களை இனங்கண்டு விளக்குக.

- **காவிரிப் பலராடு பெருந்துறை**: காவிரி ஆற்று நீர்த் துறையாகிய பரத்தையிடத்து ஆண்களாகிய மக்கள் எப்போதும் நீராடும் உறவுகொண்டவர்களாகவே இருக்கும் பரத்தையின் இழிவை இத்தொடரால் சுட்டிக்காடடியுள்ளார்.
- **மருதொடு பிணித்த ஏந்துகோட்டி யானை**: வளர்ந்துசெளித்து நிறைந்திருந்த குளிர்ந்த மருத மரங்களாகிய

  பரத்தையரிடத்து உயர்ந்து வளர்ந்த தந்தங்களையுடைய யானைகளாகிய தலைவன் பரத்தை உறவால் கட்டப்பட்டிருக்கின்றான் என்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.keau.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 05 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத்தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

வினாத்தொகுதி:01

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

- **திணை** : காஞ்சி: வாழ்க்கையில் நிலையாமை பற்றிய கருத்துக்களான உடல், இளமை, செல்வம் முதலிய செய்திகளைக் கூறுவதாக பெரும்பாலும் இருபாலாருமுடைய வீரத்தைக் குறிக்கும்.
- **ஆண்பால் காஞ்சி:** போரில் புண்பட்ட தலைவன் அப்புண்ணோடு வாழ விரும்பாமல் போர் புண்ணைத்தானே வேலால், வாளால், கிழித்துப் போர்க்களத்தில் கிடந்து மாய்ந்து இறப்பதாகும்.
- **பெண்பால் காஞ்சி:** போர்க்களத்தில் புண்பட்டு இறக்கவிருக்கும் தலைவனை தலைவி கட்டித்தழுவ பிரிவுத்துயர் ஆற்றாமையினால் தலைவி பல வஞ்சினங்கள் கூறி தலைவனின் உடலைப் பாதுகாத்து அவன் இறந்த பின்பு அவளும் உடன்கட்டை ஏறி மாய்வதாகும்.
- **துறை** : **வஞ்சினக் காஞ்சி:** பகை அரசர் போர்க்களத்தில் எதிர்ப்படக் கூறிய புல்லிய வார்த்தைகளை (சிறுவார்த்தைகள்) பொறுத்துக்கொள்ளப்பெறாது, கடுங்கோபமுற்று (வஞ்சினங் கொண்டு) வெகுளியும் எள்ளலும் வெளிப்படுவதாகிய வஞ்சின வார்த்தைகளால் அமைவதாகும்.

(04 புள்ளிகள்)

www.lkedu.lk

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- நகுதகக்னர் - சிரிக்கத் தக்கார்
- மீக்கூறுநர் - மிகுத்துச் சொல்லுவார்
- உளையக் கூறுதல் - வெறுப்பச் சொல்லுதல்
- சிறுசொல் - புல்லிய இழிந்த வார்த்தை

(04 புள்ளிகள்)

(iii) பாண்டியன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ் செழியனை பகைத்த அரசர்கள் இழிவாகக் கூறிய வார்த்தைகள் யாவை?

- 'இவனையும், இவன் ஆழும் நாட்டையும் உயர்த்திக் கூறுபவர்கள் நகைப்புக்கு இடமானவர்கள்'
- 'இவன் அரசியல் அனுபவம் இல்லாத இளையவன்'.
- 'நாம் ஒலியெழுப்பும் மணிகள் கட்டப்பட்டதும் பரந்த அடியோடு கூடிய பருத்த காலை உடையதுமான உயர்ந்த யானைப்படை,தேர்ப்படை, குதிரைப்படை, ஆயுதம் தாங்கிய காலாற்படை, என்பவற்றை உடையோம்' என செருக்குடன் கூறியமை.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:02</u>

(i) இப்பாடலில் புலவர் வெளிப்படுத்த விளைந்த விடயத்தைக்குறிப்பிட்டு விளக்குக.

- **தலையாலங் காலத்து செருவென்ற பாண்டியன் நெடுந் செரியனின் உள உறுதியும் வீரச் செழிப்பும் வெளிப்படுத்தப்பட்டது:** பாண்டியன் நெடுஞ்செழியனின் தன்மான உணர்வம் விரமும் எனும் வகையில் தன்னை இழிவாகப் பேசியவர்களை போர்க்களத்தில் சிதறடித்து அவர்களையும் முரசங்களையும் கைப்பற்றுவேன் எனக் கூறுவதுடன் அவ்வாறு செய்யாமல் இருப்பேனாய் எனது குடி மக்கள் ''கொடுங்கோலன்'' ''என பழிதூற்றுதலுக்கு மாங்குடி மருதனை தலைவனாக உள்ள புலவர்கள் எனது நில எல்லையை பாடாது ஒழித்தலுக்கு எனது குடி மக்களின் இரப்போருக்கு அவர்களின் கண்சோருமாறு எதையும் கொடுக்க முடியாத வறுமை என்னை வந்தடைவதற்கும் உரியவன் ஆவேன்'' என்று கூறியவற்றை உணர்த்துகின்றது.

(04 புள்ளிகள்)

(ii) பாடல் வெளிப்படுத்தும் விழுமியக்கருத்துக்கள் யாவை?

- நாட்டை ஆளும் அரசன் ஒருவனிடம் தன்மான உணர்வும் வீரமும் இருத்தல்.
- குடிமக்களைப் பாதுகாப்பது ஓர் அரசனின் இன்றியமையாக்கடமை.
- இரந்து வந்தவர்களுக்கு பொருள் வழங்குவதனை உயர்வாகக் கருதல்.
- இரந்து வந்தவர்களுக்கு பொருள் வழங்க முடியாவிட்டால், இழிவு ஏற்படும் என்பதை உணர்தல்.
- புகழுக்கு உரியவராயின் உயர்வும் குடிமக்களின் பழிக்கு உள்ளாவதன் இழிவும் ஏற்படும் என்பதை உணரவேண்டும்.

(04 புள்ளிகள்)

(iii) தலையாலங் கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்சழியன் கூறிய வஞ்சின வார்த்தைகள்யாவை?

- புன்மையான(இழிவான) வார்த்தைகளை பேசிய சினம் மிகுந்த அரசர்களைப் போரில் தாக்கி அழிப்பேன்.
- அவர்களது முரசங்களுடன் அவர்களையும் ஒரு சேரக் கைப்பற்றுவேன்.

www.kcu.lk

- அவர்களை அழித்து வெற்றி கொள்ளேனாயின் எனது ஆட்சியில் வாழும் குடிமக்கள் சென்று வாழ்வதற்கும் பாதுகாப்பான வேறிடம் இன்மையால் ''எங்கள் அரசன் கொடியவன்'' என்று கண்ணீர் விட்டுப் பழி சொல்லித்தூற்றும் கொடுங்கோலன் ஆகுவேனாக.
- மேலான சிறப்பையும், உலகத்தாரின் போற்றுதலையும் உடைய அறிவிற் சிறந்த மாங்குடி மருதனை தலைவராகக் கொண்ட புலவர்களால் எனது நிலத்தின் எல்லையானது புகழ்ந்து பாடப்படாதது ஆகட்டும்.
- என்னால் பாதுகாக்கப் படுபவர்களின் வருத்தமுற்ற கண்கள் சோருமாறு இரப்பவர்களுக்கு எதனையும் வழங்க முடியாத வறுமை என்னை வந்து சேர்வதாக.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:03</u>

(i) ஓர் அரசனை இழிவுபடுத்தும் கீழ்மை உணர்வுகள் என நெடுஞ்செழியனின் உள்ளத்தில் ஊறி நின்றவை யாவை?

- குடிமக்கள் பழிதூற்றும் கொடுங்கோன்மை.
- புலவர் பாடும் புகழ் பெறாமை.
- இரவலர்க்கு ஈயாமை.

(04 புள்ளிகள்)

(ii) அரசர்க்கு உரியதாகக் கூறப்படும் சிறப்புகள் தொடர்பாக இப்பாடலில் வெளிப்படும் அம்சங்கள் யாவை?

- தன்மான உணர்வும், வீரமும் உடையவராய் இருத்தல்.
- யானை, தேர், குதிரை,காலாற்படை, முதலிய நால்வகைப் படைகள் காணப்படுதல்.
- பகை வெல்லும் திறன் காணப்படுதல்.
- குடிமக்களை பாதுகாக்கும் கடமை உணர்வு இருத்தல்.
- செங்கோலனாக மக்களால் போற்றப்படுதல்.
- அறிவும்,புகழும், உடைய புலவர்களால் மன்னனும் அவன் ஆளும் நாடும் புகழப்படுதல்.
- இரப்போருக்கு ஈயும் கொடைப்பண்பு காணப்படுதல்.

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடலில் வெளிப்படும் சங்ககால புறத்திணை மரபுகளை எடுத்துக்காட்டுக.

- காஞ்சித்திணையில் வஞ்சினக்காஞ்சி வெளிப்படுமாறு பாடப்பட்டது.
- பாட்டுடைத் தலைவனின் பெயர் அல்லது இடம் அமையுமாறு பாடப்பட்டது.
- பகையரசர்களைப் போரிலே வென்று அவர்களை முரசத்துடன் ஒன்றாக கைப்பற்றுவேன் என வீரம் வெளிப்படுமாறு பாடப்பட்டது.
- அரசனின் புகழ் மற்றும் கொடை, தன்மான உணர்வு, படைச்சிறப்பு, என்பன வெளிப்பட்டன.
- தலையாலங் கானத்து பாண்டியன் நெடுஞ்செழியனின் கூற்றாக அமைந்தது.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ked.lk

வினாத்தொகுதி:04

(i) இப்பாடலில் உள்ள மேல்வரும் சொற்களின் பொருள்களை குறிப்பிடுக.

- சமம் - போர்
- நிலைஇய - நிலைபெற்ற
- புரப்போர் - ஆதரித்துக் காப்பவர்
- புன்கண் - துயரம்

(04 புள்ளிகள்)

(ii) பாடலில் வெளிப்படும் சங்ககாலத்து பண்பாட்டு அம்சங்கள் என நீர் கருதுபவை யாவை?

= பாண்டியன் நெடுஞ்செழியனின் தன்மான உணர்வுடனும் வீரத்துடனும் விளங்கினான்.

= குடிகளைப் பாதுகாத்தலில் ஓர் அரசன் கடமை உணர்வுடன் செயற்பட்டான்.

= இரந்து வந்தவர்களுக்கு ஈதலின் உயர்வும் ஈயமுடியாமையின் இழிவும் முதன்மையானவை.

= பெரியவர்களின் புகழுக்கு உரியவராவதன் சிறப்பும் குடிகளின் பழிக்கு ஆளாவதன் இழிவும் வலியுறுத்தப்பட்டன.

= அக்காலப் புலவர்கள் ஒரு தலைமையின் கீழ் ஓர் அமைப்பாக இயங்கிவந்துள்ளனர்.

= அரசர்களிடம் நால்வகைப் படை காணப்பட்டுள்ளன.

(04 புள்ளிகள்)

(ii) தலையாலங் கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் தன்மான உணர்வும், வீரமும் வெளிப்படுத்தும் விதத்தினை எடுத்துக்காட்டுக.

- தலைமைத்துவம், இரப்போருக்கு கொடுக்கும் தன்மை முதலான பிற **சிறப்புகளால் அரசன் போற்றப்படுவதனூடாக,**
- **இம்மைப் புகழினை இழக்க நேரிடும் என்பதை எடுத்துரைத்து**
- புல்லிய வார்த்தைகளைக் கூறி தன்னை ஏளனம் செய்த பகை மன்னர்கள் செயல்கள் மீது **சினம் கொண்டு கண்டித்து,**
- யானை,தேர், குதிரை,காலாற் படைகளையும் உடையோம் என செருக்குற்று தன்னை ஏளன வார்த்தைகளால் பேசியவர்களை நோக்கி போரிலே சிதறும் படி தாக்குவேன் என **வஞ்சினம் உரைப்பதன் ஊடாக** தன் கருத்தை வெளிப்படுத்தி
- எதிரிகளை போரிலே தாக்கி அவர்களது முரசத்துடன் அவர்களையும் ஒன்றாக கைப்பற்றுவேன் என **தன் வீரத்தில் படை பலத்தில் நம்பிக்கையை வெளிப்படுத்தி**
- பகையரசர்களை அழிக்காவிடின், குடிமக்கள் பழி துற்றுங் கொடுங்கோலன் ஆகவும் புலவர்களால் பாடப்படாத நாட்டை உடையவனாகவும், இரப்போருக்கு ஈயாத வறுமை உடையவனாகவும் வாழ்வதால் இம்மைப் புகழினை இழந்து மறுமைப் புகழையும் அடையமுடியாது என **சபதம் செய்து**
- நாற்படை பணியரசர்களை போரிலே சிதறம் படி தாக்குவேன் எனும் வெகுளி அவையும், கவிஞர்களால் புகழப்படாமல் குடிமக்களால் பழிதூற்றப்படுவதால் **எள்ளல் சுவையும் வெளிப்படுமாறு தன்கூற்றினூடாக**

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ikeou.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 06 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம்: கொம்பில் வைத்த கவளம் போல

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

வினாத்தொகுதி:01

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

- **திணை** : பாடாண்திணை:பாடாண்திணை என்பது புகழ்ந்து பாடத்தக்க ஆண்மகனின் ஒழுகலாறு. ஒருவனுடைய வீரம்,கொடை, தண்ணளி முதலானவை புகழ்ந்து பாடப்படுதல்.
- **துறை** : பரிசில் கடாநிலை:பரிசில் கடாநிலை என்பது யாவரும் பரிசில் பெற்றார். யான் பெற்றிலன் எனத் தனது பரிசில் பெறும் விருப்பத்தைப் பரிசில் கொடுப்போனிடத்தே புலப்படுத்திக் கூறுதல். பரிசிலரை விட்டு நீங்காமல் இருக்கும் தலைவனுக்குப் பரிசில் விரும்பியோன் தன் சுற்றத்தினரது துன்பம் முதலியவற்றைக் கூறிப் பரிசில் கேட்டு நின்ற நிலை, பரிசில் தாழ்ப்பினும் தருதல் தப்பாது என்றுஉரைத்து அதனைத் தருமாறு குறிப்பால் வேண்டுதல் முதலானவை ஆகும்.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- நீட்டினும் - காலத்தை நீட்டினும்
- தலைநாள் - முதலிற் சென்ற நாள்
- ஏமாந்த - ஆசைப்பட்ட
- பயின்று - பழகி

(04 புள்ளிகள்)

(iii) அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத் திறனும் புகழும் எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

- விருந்தினர் எத்தனை முறை செல்லினும் இனிது வந்து வரவேற்பவன் என அவனது **வரவேற்பு சிறப்பை எடுத்துக் காட்டி**
- அரசனை நாடி வருவோர்க்கு கொடை நிச்சயமானது என்பதை எடுத்துரைத்தது.

www.ikedu.lk

- அதியமான் நெடுமான் அஞ்சியும் கொடையையும் புகழையும் **நெஞ்சத்தை விழித்து கூறுவனூடாக**
- பாடத்தக்க ஆண் மகனின் ஒழுகலாறு அவனுடைய வீரம் கொடை தன்னழி முதலான பாடாண் திணைகளின் ஊடாக
- ''வருந்தவேண்டா வாழ்கவென்றாளே'' என **வாழ்த்துப் பொருளை கையாண்டு**
- ''யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போல'' எனும் **உவமையணியினை கையாள்வதாகும்.**

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:02</u>

(i) இப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பத்தைக்குறிப்பிடுக.

- ஔவையார் அதியமானிடம் பரிசில் வேண்டிப் பாடிச்சென்ற சமயம் அரசன் அதனை உடன்வழங்கவில்லை. அதியமான் ஔவையாரிடம் பெரும் மதிப்பும் விருப்பும் உடையவன். பரிசில்வழங்கத் தாமதித்த போதும் ஔவையார் அதியமானின் உண்மை உள்ளத்தைக் கருத்திற் கொண்டு, கொடையின் நிச்சயத்தன்மையை தன் நெஞ்சிற்கு உரைப்பதாய் அமைந்த சந்தர்ப்பதில் பாடப்பட்டது.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- கவளம் - உணவுத்திரள்
- பூண் - அணிகலன்
- பெறாஉங் காலம்-பெறுகின்ற வேளை
- பொய்யாகாது -தப்பாது

(04 புள்ளிகள்)

(iii) அதியமான் நெடுமான் அஞ்சி சிறப்புக்களாக இப்பாடலில் குறிப்பிடப்படுவன யாவை?

- *கடையேழு வள்ளல்களின் ஒருவரான அதியமான் நெடுமான் அஞ்சி மறவர்களுக்கு தலைவனாக விளங்கியவன்.*
- *உண்டோரை நெடுங்காலம் வாழ்ந்திருக்கச் செய்யும் நெல்லிப் பழத்தையும் பெற்று அதனை ஔவைக்கு கொடுத்தவன்*
- *காஞ்சி நகர் அரசன் தொண்டைமானிடத்து ஔவையை தூது விட்டவன்.*
- *பனை மாலையும் வெட்சி, வேங்கைப்பூவையும் அணியும் அதியமான் சேரமானுடைய உறவினன் ஆவான்.*
- *இவன் கோவலூரை வெற்றி கொண்டமையை பரணர் பாடியுள்ளார்.*
- *இவனுடைய ஊர் தகடூர் ஆகும். இவன் மகன் பொருட்டெழினி ஆவான்.*
- *இவனை ஔவையார், பரணர், பெரும் சித்திரனார், பொன் முடியார், முதலியோர் பாடியுள்ளனர்.*
- நாம் ஒருநாள் அல்ல இரண்டு நாள் அல்ல பல நாளும் மீள மீள பலரோடு கூடச் சென்றாலும் முதல் நாளினைப் போல விருப்பமுடன் உதவும் பண்புடையவன்.
- அவன் பரிசில் தர காலம் சிறிது தாழ்ப்பினும் தாழ்த்தா விடினும் யானையினது கோட்டிடை வைத்த (கொம்பின் இடையே) வைக்கப்பட்ட கவளம் எப்படியும் அதன் வாயகத்தை சேர்வது போல காலம் தாழ்ந்தாலும் தாழ்த்தாவிட்டாலும் எப்படியும் நிச்சயமாக கைவந்து சேரும் என புலவர்கள் உறுதியாக நம்பும் கொடை வள்ளல்

www.lkedu.lk

- அணிகலன்கள் அணிந்த யானையும் தேரையும் உடையவன்.
- ‘‘வாழ்க அவன்தாளே’’ என புலவர்களால் பாடிப் புகழ்த்தப்படும் / வாழ்த்தப்படும் சிறப்புடையவன்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:03</u>

(i) இப்பாடலில புலவர் வெளிப்படுத்த விளைந்த விடயங்கள் எவை?விளக்குக.

- அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்திறனும்புகழும்

(04 புள்ளிகள்)

(ii) ஔவையாரின் மனம் வாட்டமடைந்த பின்னணியைக்குறிப்பிடுக.

- ஔவையார் அதியமானிடம் பரிசில் வேண்டி பாடிச் சென்ற அரசன் அதனை உடன் வழங்கவில்லை. அதனால் பரிசில் வழங்க தாமதம் ஏற்பட்டது. அதியமான் அஞ்சி ஔவையாரிடம் பெரும் மதிப்பும் விருப்பும் உடையவன். எனினும் ஔவையார் அதியமானின் உண்மை உள்ளத்தை கருத்திற்கொண்டு கொடையின் நிச்சய தன்மையை தன் நெஞ்சிற்கு உரைப்பதாய் இப்பாடல் பாடப்பட்டது.

(04 புள்ளிகள்)

(iii) அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடை மாண்பினை எடுத்துக்காட்டுக.

- ஒரு நாள், இரு நாள் பல நாள் ஒருவரோடு சென்றாலும் பலரோடு சென்றாலும் முதலில் சென்ற நாள் போன்ற விருப்பினன் என்பதால் அதியமானின் சலியாத கொடைத்திறன் புலப்படுத்தப்பட்டது.
- கோட்டிடை வைத்த கவளம் போல எனும் உவமைத்தொடர் மூலம் யானையினது தந்தத்தில் வைத்த கவளம் எப்படியும் அதன் வாயகத்தை போய் சேர்வது போல காலம் தாழ்ந்தாலும் தாழாவிட்டாலும் எப்படியும் தமது கைவந்து சேரும் என அவனது கொடையின் உறுதியும் நிச்சயத் தன்மையும். புலப்படுத்தப்பட்டது.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:04</u>

(i) ‘‘யானைதன் கோட்டிடை வைத்த கவளம் போலக் கையகத்தது’’ எனும் தொடர் ஊடாக வெளிப்படுத்தப்படும் அணியை எடுத்துக்காட்டுக.

- **உவமை அணி:**

  உவமானம்:யானையினது கோட்டிடை வைத்த (கொம்பின் இடையே) வைக்கப்பட்ட கவளம் எப்படியும் அதன் வாயகத்தை சேர்வது

  உவமேயம்:காலம் தாழ்ந்தாலும் தாழ்த்தாவிட்டாலும் எப்படியும் நிச்சயமாக கைவந்து சேரும் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்தன்மை.

  பொதுத்தன்மை: நிச்சயமான கொடைத்தன்மை.

(04 புள்ளிகள்)

(ii) பாடலில் புலவர் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்திறனை வெளிப்படுத்த கையாண்ட உத்திகளை எடுத்து விளக்குக.

- **ஒருவரோ பலரோ கொடைபெறச் செல்லும் தடவையையும் முறையையும் சுட்டிக்காட்டி**:ஒரு நாள், இரு நாள் பல நாள் ஒருவரோடு சென்றாலும் பலரோடு சென்றாலும் முதலில் சென்ற நாள் போன்ற விருப்பினன் என்பதால் அதியமானின் சலியாத கொடைத்திறன் புலப்படுத்தப்பட்டது.

www.ikeu.lk

- விருந்தினர் எத்தனை முறை செல்லினும் இனிது வந்து வரவேற்பவன் என அவனது **வரவேற்பு சிறப்பை எடுத்துக் காட்டி** வெளிப்படுத்தியுள்ளார்.
- **கோட்டிடை வைத்த கவளம் போல எனும் உவமைத்தொடர் மூலம்**: யானையினது தந்தத்தில் வைத்த கவளம் எப்படியும் அதன் வாயகத்தை போய் சேர்வது போல காலம் தாழ்ந்தாலும் தாழாவிட்டாலும் எப்படியும் தமது கைவந்து சேரும் என அவனது கொடையின் உறுதியையும் நிச்சயத் தன்மையும் புலப்படுத்தியுள்ளார்.
- அதியமான் நெடுமான் அஞ்சியும் கொடையையும் புகழையும் **நெஞ்சத்தை விழித்தும்** ‘‘வருந்தவேண்டா வாழ்கவென்றாளே’’ என **வாழ்த்துப் பொருளை கையாண்டும்** பாடத்தக்க ஆண் மகனின் ஒழுகலாறு,வீரம்,கொடை,தன்னழி முதலான பாடாண் திணைகளின் ஊடாகவும் வெளிப்படுத்தியுள்ளார்.

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடல் வெளிப்படுத்தும் சங்ககால புறப்பாட்டு மரபுகளை எடுத்துக்காட்டுக.

* பாடாண் திணையில் புலவர் (ஔவையார்) கூற்றில் அமைந்துள்ளது.
* பரிசில் கடாநிலை எனும் துறையையுடையது எல்லோரும் பரிசில் பெற தான் பெறவில்லை என தனது பரிசில் கொடுப்போர் இடத்தே புலப்படுத்தி கூறுவதாகும்.
* அதியமான் நெடுமான் அஞ்சி என்ற மன்னனின் பெயர் சுட்டி பாடப்பட்டிருத்தல்
* அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத் திறனும் புகழும் வெளிப்படுமாறு பாடப்பட்டிருத்தல்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.lkedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 07 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : மாரி போல

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) அறு குளத்து உகுத்தும், அகல் வயல் பொழிந்தும்,
உறுமிடத்து உதவாது உவர் நிலம் ஊட்டியும்,
வரையா மரபின் மாரி போலக்,
கடாஅ யானைக் கழல் கால் பேகன்
கொடை மடம் படுதல் அல்லது,
படை மடம் படான், பிறர் படை மயக்குறினே.

வினாத்தொகுதி:01

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

- **பாடல் இடம் பெற்ற திணை : புறத்திணை:**பாடாண் திணை (பாடப்படும் ஆண்மகனது ஒழுக்கம்) மன்னர்களின் வெற்றி,வலிமை,அணி,புகழ்,கொடைத்திறன்,வீரச்சிறப்பு முதலியவற்றைப் பாடுதல்.

- **துறை** :இயன்மொழி வாழ்த்து (அரசனது தன்மையினைப் புகழ்ந்து சொல்லும் புறத்துறையே இயன்மொழிவாழ்த்து ஆகும். இந்த அரசன் இவ்வாறு கொடுத்தான். அவர் போல மற்றவரும் கொடுத்தல் வேண்டும் என்று பிறர் அறியக் கூறுவதும் ஆகும். கொடைமடம் படுதல் அல்லது,படை மடம் படான் எனஅரசனது இயல்பு மிகுதி தோன்றக் கூறுவது.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- அறுகுளம் - நீர் அற்ற குளம்
- கடாஅ யானை - மதம் பிடித்த யானை
- வரையா - வரையறுக்கப்படாத
- மயக்குதல் - கலத்தல்

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடலில் வெளிப்படம் பேகமன்னனின் குணவியல்புகளை எடுத்தக்காட்டுக.

- கொடை வழங்கும்போது வேறுபாடுகாட்டாது,மழைபோல வரையாது வழங்கும் இயல்புடையவன்.
- போர்க்களத்தில் வீரமில்லாதவர், புறமுதுகிட்டார், காயமடைந்தோர் மூத்தோர்,இளையோர், முதலியோர்மீது போர்செய்ய விரும்பாமையும்,எதிர்நின்று போராடும் போர் வீரருடன் மட்டும் போர் செய்யவிரும்புபவன்.
- மதங்கொண்ட யானையை உடயவனாக,வீரக்கழலை அணிந்தவன்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.keu.lk

<u>வினாத்தொகுதி:02</u>

(i) இப்பாடல் பாடப்பட்ட பின்னணியை குறிப்பிடுக.

- வையாவிக் கோப்பெரும் பேகன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். ஆவனிடத்து மிகுந்த ஈடுபாடுடைய புலவர் பரணர் அவனுடைய கொடைத் தன்மையையும் போர்த் தன்மையையும் இந்தப் பாடலில் புகழ்கின்றார்.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாலில் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயங்கள் யாவை? விளக்குக.

- பேகன் கொடைமடம் படுவானாயினும் படைமடம் படமாட்டான் என்பதையே செய்யுளின் முதன்மைக்கருத்தாக முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே இதனூடாக பேகனது கொடைநலச்சிறப்பையும் வீரச்சிறப்பையும் வியந்து வெளிப்படுத்தியுள்ளார்.

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடலில் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.?

- விளை நிலத்தில் மட்டுமன்றிக் களர்(உவர்) நிலத்திலும் பொழியும் மழையை உவமையாக்கி அனைவருக்கும் கொடுக்கும் அவன் கொடைச்சிறப்பைக் கூறுதல்.
- கோடை மடம் படுதல் என்ற தொடர் மூலம் பழிப்பது போலப் புகழ்தல் (பொதுவாக மடம்படுதல் இகழ்ச்சிக்குரியது. ஆனால் கொடை விடயத்தில் அது புகழ்ச்சிக்குரியதாகிறது)
- அரசனது வரையாது வழங்கும் கொடைத்தன்மையின் மிகுதியை எடுத்துக்காட்டுவதன் மூலமாக.<u>மடம்படுதல்</u> : 'அறியாமைப்படுதல்' என்பதாகும்.இது இப்பாடலில் இருவகைகளில் வருகிறது.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:03</u>

(i) இப்பாடலில் கொடைமடம்படுதல் என்பதனால் கருதப்படுவது யாது?

- கொடைமடம்படுதலாவது,கொடையின்போது அறியாமைப்படுதலாகும்.பரிசில் பெற வருவோரை வேண்டப்படுவார், வேண்டப்படாதவர், வலியோர், மெலியோர், புதியோர், பழையோர், என்ற வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் கொடையளிப்பதன் இயல்புடைமையே கொடைமடம்படுதல் ஆகும்.
- மழையானது நீர் இல்லாத குளத்தில் பொழியவேண்டும்.வயலில் பொழியவேண்டும். அவ்வாறன்றி களர் நிலத்திலும் பொழிவது போல வள்ளல் பேகன் கோடை வழங்குவதில் ஒரு மடையனாக விளங்குபவன். ஆனால் போரின்போது மடமை இல்லாதவன். நல்லவர்களை விலக்கி அல்லாதவர்களைக் கொல்பவன்.

(04 புள்ளிகள்)

(ii) பாடப்பட்ட பேகன் **மன்னனின் கொடைச்சிறப்பு இப்பாடலில் எவ்வாறு துலக்கம் பெறுகின்றது?**

- சங்க இலக்கியம் குறிப்பிடும் கடையெழுவள்ளல்களில் புகழ்பெற்ற ஒருவனாகிய வையாவிக்கோப் பெரும் பேகன் மிகுந்த கொடையாளி.
- மயிலுக்குப் போர்வை கொடுத்தவன் கபிலர், பரணர், வன் பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்க் கிழார் ஆகிய புலவர்கள் இம்மன்னனைப் பாடியுள்ளனர்.
- அன்புள்ளத்தோடு பொருட்களை வாரி வழங்கும்போது,இவருக்க கொடுக்கவேண்டும்,இவருக்கக் கொடுக்கக்கூடாது என்ற வரையறை இல்லாமல் கேடபவர் எல்லோருக்கும் வாரிக் கொடுத்தவன்.

www.lkedu.lk

- அவனது கொடைச்சிறப்பினைப்புகழ மழைக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.மழை பெய்யும்போது,பயன்படும் குளத்திலும் பொழிகிறது,வயலிலும் பொழிகிறது,ஒருவகையிலும் பயன்படாத உவர் நிலத்திலும் பெய்கின்றது.அந்த மழைக்குள்ள அறியாமை பேகனிடத்திலும் இருந்ததது என்கிறார் பரணர்.
- இரக்க நெஞ்சத்தால் தக்கவர் தகாதவர் என்றபாகுபாடு இல்லாமல் பொருளுதவி செய்தபோதிலும் வீரநெஞ்சத்தால் போர்க்களம் புகுந்து எதிரிகளின் படைகளோடு போர் செய்யும்போது அந்த அறியாமையை பேகனிடம் காணமுடியாது.
- போர்களத்தில் இன்னாரை தாக்கவேண்டும் இன்னாரை தாக்கக்கூடாது என்ன தெளிவுடன் போர் செய்யும் சிறந்த வீரன்.ஆகவே பேகனிடம் கொடைமடம் உண்டே தவிர படைமடம் இல்லை என்பதினூடாக கொடைச்சிறப்பக் கூறப்பட்டது.

(04 புள்ளிகள்)

(iii) பாடலில் கையாளப்பட்ட உவமை அணியின் சிறப்பினை எடுத்துக்காட்டுக.

- வரையா மரபின் மாரி போலக் கடாஅ யானைக் கழல் கால் பேகன்:பேகனின் கொடைமடத்திற்கு மாரிமழையை உவமித்துள்ளார்.
- உவமானம்: ஒரே தன்மையினதாகப் பெய்யும் மாரிமழை,உவமேயம்: எத்தகுதியினராயினும் ஒரேதன்மையில் கொடை வழங்கல்,பொதுத்தன்மை:தகுதிபார்க்காது சகலருக்கும் வழங்கும் இயல்பு.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:04</u>

(i) இப்பாடலில் படை மடம் படுதல் என்பதனால் கருதப்படுவது யாது?

- படை மடம் படுதலாவது,போர் புரியும்போது அறியாமைப்படுதலாகும். வீரமில்லாதவர், புறமுதுகிட்டார், காயமடைந்தோர் மூத்தோர்,இளையோர், முதலியோர்மீது போர்செய்ய விரும்பாமையும்,எதிர்நின்று போராடும் போர வீரருடன் மட்டும் போர் செய்வதுமாகும்.

(04 புள்ளிகள்)

(ii) "வரையா மரபின் மாரி போலக்...பேகன்" எனும் தொடர் ஊடாக வெளிப்படுத்தப்படும் செய்தியைக் குறிப்பிடுக.

- மழையானது நீர் இல்லாத குளத்தில் பொழியவேண்டும்.வயலில் பொழியவேண்டும். அவ்வாறன்றி விளை நிலத்தில் மட்டுமன்றிக் களர்(உவர்) நிலத்திலும் பொழியும் மழையை உவமையாக்கி அனைவருக்கும் கொடுக்கும் வள்ளல் பேகனின் கொடைச்சிறப்பைக் குறிப்பிட்டுள்ளார்.
- அவனது கொடைச்சிறப்பினைப் புகழ மழைக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.மழை பெய்யும்போது,பயன்படும் குளத்திலும் பொழிகிறது,வயலிலும் பொழிகிறது,ஒருவகையிலும் பயன்படாத உவர் நிலத்திலும் பெய்கின்றது. அந்த மழைக்குள்ள அறியாமை பேகனிடத்திலும் இருந்ததது என்கிறார் பரணர்.

(04 புள்ளிகள்)

(iii) பாடல் வெளிப்படுத்தும் புறத்திணைப் பண்புகளைக் குறிப்பிடுக.

* பாடாண் திணையில் புலவர் கூற்றில் அமைந்துள்ளது. மன்னர்களின்வெற்றி,வலிமை, அணி,புகழ்,கொடைத்திறன், வீரச்சிறப்பு முதலியவற்றைப் பாடுதல்.
* பேகனது கொடை நலச்சிறப்பையும் வீரச்சிறப்பையும் வியந்து பெயர்சுட்டி வெளிப்படுத்தியுள்ளார்.
* இயன் மொழித்துறை:கொடைமடம் படுதல் அல்லது,படை மடம் படான் எனஅரசனது இயல்பு மிகுதி தோன்றக் கூறுவது.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ikeju.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 08 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : முல்லையும் தேரும்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) படுமழை பொழிந்த பயமிகு புறவின்
நெடுநீர் அவல பகுவாய்த் தேரை
சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்கக்
குறும்புதல் பிடவின் நெடுங்கால் அலரி
செந்நில மருங்கின் நுண்அயிர் வரிப்ப
வெஞ்சின அரவின் பைஅணந் தன்ன
தண்கமழ் கோடல் தாதுபிணி அவிழத்
திரிமருப்பு இரலை தெள்ளறல் பருகிக்
காமர் துணையொடு ஏமுற வதியக்
காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி
ஓடுபரி மெலியாக் கொய்சுவல் புரவித்
தாள்தாழ் தார்மணி தயங்குபு இயம்ப
ஊர்மதி வலவ தேரே சீர்மிகுபு
நம்வயிற் புரிந்த கொள்கை
அம்மா அரிவையைத் துன்னுகம் விரைந்தே.

<u>வினாத்தொகுதி:01</u>

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

- **திணை:** முல்லைத் திணை
- **துறை** : வினை முடிந்த தலைமகன் தலைவியை காணத் துடிக்கும் ஆர்வ மேலீட்டால் உள்ளமே எனக் தேர்பாகனுக்கு சொல்லியது:
  - = தலைவன் வினை நிமித்தம் தலைவியை பிரிந்து செல்ல நேர்ந்த போது வருந்திய தலைவிற்கு கார்காலம் வந்ததும் திரும்பி வருவேன் என ஆறுதல் கூறி பிரிந்தான். வினையும் முடிந்தது. கார்காலமும் வந்து தலைவியைக் காணும் வேட்கை மிகுந்த தலைவன் தன் பாகனிடம் கூறியது.
  - = தனது போர்த் தொழில் முடிந்து திரும்பும் தலைவன் கார்காலம் வந்துவிட்ட நிலையில் தலைவியிடம் செல்ல வேகமாகத் தேரினைச் செலுத்தும்படி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- ஊர்மதி - (விரைவாக) செலுத்துவாயாக
- புரிந்த - அன்பு / விருப்பம் கொண்ட
- திரி மருப்பு - முறுக்கிய கொம்பு
- பிணி அவிழ - கட்டு அவிழ

(04 புள்ளிகள்)

www.lkedu.lk

(iii) முல்லைநிலத்துக் கார்காலம் பற்றிய வர்ணனைகள் இப்பாடலில் துலங்குமாற்றை எடுத்துக்காட்டுக.

- மழை மிகுதியாக பொழிதல்
- முல்லை நிலத்தில் பசுமைப்பயன்கள் காணப்படல்
- பள்ளங்களில் நீர் நிரம்பிக் காணப்படல்
- நீர்ப்பள்ளங்களிலிருந்து தவளைகள் ஒலித்தல்
- பிடவம் செடிகள் மலர்ந்து அவற்றின் மலர்கள் செம்மண் நிலத்தில் உதிர்ந்து கிடத்தல்.
- காந்தல் மொட்டுக்கள் கட்டவிழ்ந்து மலர்ந்திருத்தல்
- ஆண்மான் சுனைநீரை அருந்தி பெண் மானுடன் இன்புற்றிருத்தல்

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:02</u>

(i) பொதும்பிற் புல்லாளங்கண்ணியார் இப்பாடலைப் பாடிய சந்தர்ப்பத்தைக்குறிப்பிட்டு,பாடலின் பேசுபொருளை எடுத்துக்காட்டுக.

- **சந்தர்ப்பம்:** முல்லை நிலத்தலைவன் வினை நிமித்தம் தலைவியை பிரிந்து செல்ல நேர்ந்த போது வருந்திய தலைவிற்கு கார்காலம் வந்ததும் திரும்பி வருவேன் என ஆறுதல் கூறி பிரிந்தான். வினையும் முடிந்தது. கார்காலமும் வந்து தலைவியைக் காணும் வேட்கை மிகுந்த தலைவன் தன் பாகனிடம் தேரை விரைந்து செலுத்திய சந்தர்ப்பத்தில் கூறியது.
- **பேசுபொருள்:** கார்காலத்தின் வரவால் தலைவியை காணத் துடிக்கும் தலைவனின் ஆர்வ உள்ளமே பேசப்படுகின்றது.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- நெடுநெறி - நீண்டவழி
- அணந்து - மேல் நிமிர்ந்து
- இரலை - ஆண்மான்
- படுமழை - பெருமழை

(04 புள்ளிகள்)

(iii) கையாளப்பட்ட உவமையணிகள் இரண்டை எடுத்துக்காட்டுக.

- தேரை சிறுபல்லியத்தின் கறங்க : நீர் நிறைந்த பள்ளங்களில் தவளைகளின் ஒலிகள் சிறியவையாகிய பல வாத்தியங்கள் ஒன்றிணைத்து ஒலிப்பது போல இருந்தன.
  - = உவமானம் : சிறு பல்லியங்கள் ஒலித்தல்
  - = உவமேயம் : தவளைகள் ஒலித்தல்
  - = பொதுத்தன்மை : கூட்டமாக ஒலித்தல்

- வெஞ்சின் அரவின் பை அணந்தனை தன்கமழ் கேடல் தாது பிணி அவிழ் : மிக்க சினமுடைய பாம்புகள் படம் எடுப்பது போல காந்தன் மொட்டுக்கள் இதழ் விரிந்து காணப்பட்டன.
  - = உவமானம் : வெஞ்சின அரவின் பை மேல்நோக்கி விளங்கல்
  - = உவமேயம் : காந்தல் மலர் (கர்த்திகைப்பூ) மலர்ந்திருத்தல்
  - = பொதுத்தன்மை : அழகிய தோற்றத்துடன் மேல் நோக்கி எழுந்து அசைந்தாடல்

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:03</u>

(i) இச்செய்யுள் உணர்த்த முற்படும் விடயத்தை இனங்கண்டு எழுதுக.

- தலைவியை காணத் துடிக்கும் ஆர்வ உள்ளமே எனக் கூறப்படுகிறது.
- தனது போர்த் தொழில் முடிந்து திரும்பும் தலைவன் கார்காலம் வந்துவிட்ட நிலையில் தலைவியிடம் செல்ல வேகமாகத் தேரினைச் செலுத்தும்படி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- தெள்அறல் - தெளிந்த நீர்
- தண்பதம் - குளிர்ந்த பருவம்
- மா அரிவை - மாமை நிறத்தையுடைய பெண் (தலைவி)
- பல்லியம் - பல்வகையான இசைக்கருவிகள்

(04 புள்ளிகள்)

www.ikedu.lk

(iii) பாடலில் வெளிப்படும் உள்ளுறை உவமம் இரண்டை எடுத்துக்காட்டுக.

- திருகிய கொம்புகளையுடைய இரலைமான் தெளிந்த நீரைப்பருகி தான் விரும்பும் பெண் துணையோடு நிம்மதியாக மகிழ்ந்து வாழ்கிறது எனவே **நீ உன்னவளை தழுவ வேண்டும் நான் என்னவளை தழுவ வேண்டும்.**

- கார்காலம் தொடங்கியமையும் அக்காலத்தில் நிகழ்வனவும் **தலைவியிடம் தலைவன் திரும்ப வேண்டிய சந்தர்ப்பத்தினை** நினைவுறுத்துகின்றன.

- காட்டில் பெய்யும் கனமழையும் குளிர்ந்த நீரில் குதிகலித்து கத்தும் தவளைகளும் செம்மண்ணில் உதிர்ந்து கிடக்கும் பூக்களும் காற்றில் மிதக்கும் பூ மகரந்த வாசனைகளும் **தலைவியும் தன் வருகைக்காக காத்திருப்பாள்** என்பதனை உணர்த்துகின்றன.

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:04</u>

(i) பாடலில் வெளிப்படும் குதிரைகள் பற்றிய வர்ணனைகள் யாவை?

- நீண்ட பெருவழியில் விரைவாக ஓடும் திறன் வாய்ந்தவை
- காலிலும், கழுத்திலும் சலங்கைகள் தொங்கும்படியாக ஒலி எழுப்பியவாறு ஓடுவன

(04 புள்ளிகள்)

(ii) தலைவியை விரைந்து அடையவேண்டுமென்ற தலைவனின் ஆவல் எல்லாறு புலப்படுத்தப்பட்டுள்ளது?

- ஆண் மானானது பெண் மானுடன் நீர் அருந்தி இன்புற்றிருத்தல் மூலம் தலைவனது மன நிலையில் தலைவியைக் காணும் ஆவல் வெளிப்படுத்தப்படுகிறது.
- நீர்ப்பள்ளங்களில் இருந்து தவளைகள் ஒலியெழுப்பி இன்புறுவது தலைவிடத்து விரைந்து செல்ல வேண்டும் என்கின்ற ஆர்வத்தை ஊட்டுகின்றன.
- பிடவம் செடிகள் மலர்ந்து அவற்றின் மலர்கள் செம்மண் நிலத்தில் உதிர்ந்து கிடக்கும் தோற்றம் தலைவியினது அழகையும் பிரிவுத்துயரத்தையும் நினைவுறுத்த தலைவியை அடைய வேண்டும் எனும் ஆர்வத்தால் உந்தப்படுகின்றான்.
- காந்தல் மொட்டுக்கள் கட்டவிழ்ந்து மலர்ந்திருப்பது தலைவியின் மென்மையான கையசைவு அழைப்பாக தலைவன் கணரணதவதனால் தலைவியிடத்து விரைந்து செல்ல வேண்டுமென்ற ஆவல் தொனிக்கிறது.
- விரைந்து சென்று தலைவியை காண்பதற்காக குதிரைகள் பூடடியதேரை விரைவாக செலுத்துமாறு பாகனை தூண்டுவதிலிருந்தும் தலைவனது ஆவல் வெளிப்படுகிறது.

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடலினூடாகப் புலப்படும் சங்க இலக்கியப் பண்புகள் நான்கைக்குறிப்பிடுக.

- முல்லை நிலத்துக்குரிய இருத்தல் ஒழுக்கம் கூறப்படுதல்.
- வினை முடிந்த தலைமகன் தேர்பாகனுக்கு சொல்லிய துறையாக அமைவது.
- இயற்கை வர்ணனைகளை அதிகம் கொண்டிருத்தல்:தேரைகள் சத்தமிடுதல்,பிடவு மரத்தின் மலர்கள் உதிர்தல்,கார்த்திகைப் பூக்கள் மொட்டு விரிதல்,ஆண் மான்கள் நீரைக் குடித்துவிட்டு, பெண் மானோடு மகிழ்ச்சியுடன் தங்குதல்.
- முல்லை நில தேர்ப்பாகன்(வலவன்) கூற்றாக பெயர் சுட்டாமல் அமைந்தது.
- தவளைகள், மான்கள்,பிடவம் கொடிகளின் மலர்கள்,காந்தல் மொட்டுக்கள்,சுனைநீர் நிலைகள் முதலிய கருப்பொருட்களை கொண்டிருப்பது.
- உள்ளுறை உவமை ஊடாகவும் கருத்தை உணர்த்துதல்: திருகிய கொம்புகளையுடைய இரலைமான் தெளிந்த நீரைப்பருகி தான் விரும்பும் பெண் துணையோடு நிம்மதியாக வாழ்கிறது எனவே நீ உன்னவளை தழுவ வேண்டும் நான் என்னவளை தழுவ வேண்டும்.

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:05</u>

(i) பாடலில் வெளிப்படும் தலைவியின் அழகு எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது எனக் கூறுக.

- தலைவனிடத்து விருப்பமான கொள்கையுடையவர்
- அழகிய மாமை நிறத்தை உடையவர்

(04 புள்ளிகள்)

www.kalvi.lk

(ii) கவிதையின் பாடுபொருள் எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

- கார்காலம் வந்ததை தெரிவிக்கும் முல்லைநில காட்சிகளை அடுக்கியவாறு எடுத்துக்காட்டுவதன் மூலம்
- தன் உள்ளத்தில் தலைவியை சந்திக்க வேண்டுமென்ற ஆர்வ மேலீட்டை கூறுவதன் மூலம்
- பல்வேறு உள்ளுறை உவமையை மிக சூட்சுமமாக கூறுவதன் மூலம்
- சாதாரண உவமையணியினை கையாண்டு வெளிப்படுத்துவதன் மூலமும் எடுத்துரைக்கின்றார்.

(04 புள்ளிகள்)

(iii) பாடலில் முல்லைநிலத்து கார்காலத்தின் வருகை சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

- மலை மிகுதியாக பொழிதல்
- முல்லை நிலத்தில் பசுமைப்பயன்கள் காணப்படல்
- பள்ளங்களில் நீர் நிரம்பிக் காணப்படல்
- நீர்ப்பள்ளங்களிலிருந்து தவளைகள் ஒலித்தல்
- பிடவம் செடிகள் மலர்ந்து அவற்றின் மலர்கள் செம்மண் நிலத்தில் உதிர்ந்து கிடத்தல்.
- காந்தல் மொட்டுக்கள் கட்டவிழ்ந்து மலர்ந்திருத்தல்
- ஆண்மான் சுனைநீரை அருந்தி பெண் மானுடன் இன்புற்றிருத்தல்

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:06</u>

(i) முல்லைத்திணைக்குரிய கருப்பொருட்களாக பாடலில் குறிப்பிடப்படுபவை யாவை?

- தவளைகள், மான்கள்
- பிடவம் கொடிகளின் மலர்கள்
- காந்தல் மொட்டுக்கள்
- சுனைநீர் நிலைகள்

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- புயம் - பயன்,நன்மை
- புறவு - முல்லை நிலம்
- கால் - பூவின் காம்பு மலர் (அலர்ந்தது)
- அயிர் - நுண்மணல்

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடலிலுள்ள சிறப்புக்களதக நீர் இனங்கண்டவை யாவை?

- கார்காலம் ஆரம்பமாகும் போது இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான வர்ணனைகள்(சங்ககாலப் பண்புகளில் ஒன்று இயற்கை வர்ணனைகளை அதிகம் கொண்டிருத்தல்)
  - = தேரைகள் சத்தமிடுதல்
  - = பிடவு மரத்தின் மலர்கள் உதிர்தல்.
  - = கார்த்திகைப் பூக்கள் மொட்டு விரிதல்.
  - = ஆண் மான்கள் நீரைக் குடித்துவிட்டு, பெண் மானோடு மகிழ்ச்சியுடன் தங்குதல். இவற்றால் முல்லை நிலமே அழகு பெறல்.

- குதிரைபற்றிய நுட்பமான வர்ணனைகள்ஓ டுபரி மெலியக் கொய்சுவல் புரவி (ஓடும் வேகம் குறையாத கொய்யப்பட்ட பிடரி மயிரினை உடைய குதிரை)

- உவமைஅணிகள்: " தேரை சிறுபல்லியத்தின் நெடு நெறிக்கறங்க" . தேரையின் ஒலிக்கு வாத்தியங்களின் ஒலி உவமையாகக் கூறப்பட்டுள்ளது. " வெம்சின அரவின் பை அணந்து அன்ன தண்கமழ் கோடல் தாது பிணி அவிழ"மொட்டவிழ்ந்து மலர்ந்த காந்தள் மலர்களுக்கு பாம்பின் படம் உவமையாக்கிக் கூறப்பட்டுள்ளது.

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

www.ikedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 09 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம்: புன்னை என்னும் தங்கை

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயராஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளர் இசை கடுப்ப
வலம்புரி வான் கோடு நரலும் இலங்கு நீர்
துறைகெழு கொண்க நீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா உளவே.

வினாத்தொகுதி:01

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

- **திணை:** நெய்தல் திணை
- **துறை:** பகற்குறிவந்த தலைமகனை தோழி வரைவு கடாயது:பகலில் தலைவியை சந்திக்க வந்த தலைவனை நோக்கி அவ்வாறு சந்திப்பதில் உள்ள இடைஞ்சலை விளக்கிய தோழி தலைவியோடு பகற் குறியில் சந்தித்தலை தவிர்த்து விரைவாக தலைவியை மணம் செய்து கொள்ளவேண்டியதன் அவசியத்தை தலைமகனுக்கு உணர்த்தியது.

(04 புள்ளிகள்)

(ii) பாடலின் பின்வரும் தொடர்களுக்கு பொருள் தருக.

- தீம்பால்-இனிய பால்
- நுவ்வை-உன் தங்கை
- கோடு- சங்கு
- ஆயம்-தோழியர் கூட்டம்

(04 புள்ளிகள்)

(iii) தோழி பகற் குறியை மறுத்தற்குரிய காரணம் யாது?

- எம்மால் நெய்யுடன் கூடிய இனியபாலை ஊற்றி வளர்க்கப்பட்ட புன்னையை எம் தாய்''உங்களையும் விட உங்கள் தங்கை சிறந்தவள்'' என்றுரைத்தார். இதனால் எம் தங்கை போன்ற புன்னை மர நிழலின் கீழ் உன்னோடு சிரித்து மகிழ்வது தவறு – பிழை.
- உடன் பிறந்தார் சுற்றத்தார் அயலில் உள்ளபோது தலைவனோடு மகிழ்ந்துரையாடுவது தகுதியற்ற செயல் என்று கூறி பகற் குறியை மறுத்தாள்.
- தலைவியோடு பேசி மகிழ விரும்பினால் திருமணம் செய்வதை தவிர வேறு வழியில்லை என்பதற்காகவும் தோழி பகற் குறியை மறுத்தாள்

(04 புள்ளிகள்)(12 புள்ளிகள்)

www.kedu.lk

வினாத்தொகுதி:02

(i) இப்பாடல் யாரால் யாருக்கு கூறப்பட்டதெனக்குறிப்பிடுக.

- **கூற்று:** தலைமகனுக்கு தோழி கூறியது:காதலியைப் பார்க்க வருகிறான் காதலன். 'அவள் உன்னைச் சந்திக்கமாட்டாள்' என்கிறாள் தோழி. 'ஏன்?' என்று பரிதாபமாகக் கேட்கும் காதலனுக்குத் தோழி சொல்லும் பதில்.

(04 புள்ளிகள்)

(ii) கையாளப்பட்ட அணி : உவமையணியினை எடுத்துக்காட்டுக.

- புதிதாய் வந்த பாணர் பாடுகின்ற இசைப்பாடல் போல வெள்ளிய வலம்புரிச் சங்கு ஒலிக்கும்:கடற்துறையில் வலம்புரிச்சங்கிலிருந்து எழும் ஒலிக்கு புதிய பாணர்கள் எழுப்புகின்ற மெல்லிய இசை உவமையாக்கப்பட்டுள்ளது.
  - = உவமானம் : விருந்திற் பாணர் விளரிசை
  - = உவமேயம் : வலம்புரி வான்கோடு தரளுதல்
  - = பொதுத்தன்மை : வலம்புரிச்சங்கிலிருந்து இயற்கையாகவே எழுகின்ற மென்மையும், இனிமையும் பொருந்திய இசை.

(04 புள்ளிகள்)

(iii) தலைவியைச் சந்திப்பதிலுள்ள இடைஞ்சலை புலப்படுத்தும் தோழியின் மதிநுட்பம் இப்பாடலில் எவ்வாறு துலங்குகின்றது?

- தலைவனின் **மனம் புண்படாதவாறு** பகற் குறியை மறுத்துரைத்தலில் இருந்தும்
- பகலில் தலைவியை சந்திப்பதில் உள்ள **இடர்பாடான**(புன்னை மர நிழலில் சந்திக்க முடியாமை) **நிலையை** எடுத்துரைப்பதிலிருந்தும்,
- **புன்னை மரத்தை கருப்பொருளாக கொண்டு** எதனால் - எதன் காரணமாக தலைவி பகற் குறிக்கு ஆஞ்சுவதாக குறிப்பிட்டு தலைவன் ஊரறிய திருமணம் செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுதுவதிலிருந்தும்,
- **பகலில் சந்திப்பதற்கு ஏற்ற வேறு நிழல் இல்லை என** பகற்குறிச் சூழலை எடுத்துரைப்பதிலிருந்தும்,
- **உடன் பிறந்தார் அருகில் உள்ளபோது** (தங்கையாகிய புன்னை மரம்) தலைவனுடன் காதற் சல்லாப உரையாடுவது தகுதியற்றது என்பதை எடுத்துரைப்பதிலிருந்தும்,
- நாம் நட்ட புன்னை மரம் தம் தங்கை என அன்னை கூறியதாக **அன்னையை முன்னிறுத்தி**க்கூறுவதிலிருந்தும்,
- தலைவியோடு பேசி மகிழ விரும்பினால் திருமணம் செய்வதை தவிர வேறு வழியில்லை என்பதை குறிப்புப் பொருளால் உணர்த்துவதிலிருந்தும், **தோழியின் மதிநுட்பம் புலப்படும்.**

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

வினாத்தொகுதி:03

(i) பாடல் குறிப்பிடும் நெய்தல் நிலம் பற்றிய செய்திகள் யாவை?

- வலம்புரியமைந்த வெண்ணிறமான சங்குகள் ஒலியெழுப்புகின்ற நீர்த்துறையுடையது
- புன்னை மர விதைகள் முளைத்து மரமாக வளர்ந்து நிற்கும் துறை

(04 புள்ளிகள்)

(ii)இப்பாடல் வழியாக நாமறிந்து கொள்ள வேண்டியதும்,வலியுறுத்தப்படுவர்மான செய்தியக் யாவை?

- தாவரங்கள் உறவாக மதிக்கப்பட்ட காலம் சங்ககாலம் என்பதையும்..
- தங்கையின் அருகிலே நின்று காதலனோடு சல்லாபிப்பது முறையானதன்று.
- மரங்களை நாம் உறவாக மதிக்காவிட்டாலும் உயிராகவாவது மதிக்கவேண்டும் என்பதும்.

(04 புள்ளிகள்)

(iii) தலைவி தொடர்பான நலனில் தோழியின் உரையாடல் மதிநுட்ப வகிபாகம் புலப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.

- தலைவனின் மனம் புண்படாதவாறு பகற் குறியை மறுத்துரைத்தல்:

www.kedu.lk

- பகலில் தலைவியை சந்திப்பதில் உள்ள இடர்பாடான(புன்னை மர நிழலில் சந்திக்க முடியாமை) நிலையை எடுத்துரைத்து,
- புன்னை மரத்தை கருப்பொருளாக கொண்டு எதனால் - எதன் காரணமாக தலைவி பகற் குறிக்கு ஆஞ்சுவதாக குறிப்பிட்டு தலைவன் ஊரறிய திருமணம் செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி,
- பகலில் சந்திப்பதற்கு ஏற்ற வேறு நிழல் இல்லை என பகற்குறிச் சூழலை எடுத்துரைத்தது,
- உடன் பிறந்தார் அருகில் உள்ளபோது (தங்கையாகிய புன்னை மரம்) தலைவனுடன் காதற் சல்லாப உரையாடுவது தகுதியற்றது என்பதை எடுத்துரைத்தது,
- நாம் நட்ட புன்னை மரம் தம் தங்கை என அன்னை கூறியதாக அன்னையை முன்னிறுத்தி,
- தலைவியோடு பேசி மகிழ விரும்பினால் திருமணம் செய்வதை தவிர வேறு வழியில்லை என்பதை குறிப்புப் பொருளால் உணர்த்தி.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:04</u>

(i) இப்பாடல் வெளிப்படுத்தும் பேசு பொருள் யாதெனக்குறிப்பிடுக.

- பகலில் தலைவியைச்சந்திக்க வந்த தலைமகனை நோக்கி,அவ்வாறு சந்திப்பதிலுள்ள இடஞ்சலை விளக்கிய தோழி, விரைவாக திருமணம் முடித்துக்கொள்ளுமாறு அவனை வலியுறுத்தியது.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- விருந்திற் பாணர் - புதியராய் வந்த பாணர்
- வான் - கேண்மை,நட்பு
- இலங்குநீர் - விளங்கு நீர்
- விளர் - இளமை,மென்மை

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடல் புலப்படுத்தும் சங்ககால அகத்திணைப் பண்புகள் நான்கினை எடுத்துக்காட்டுக.

- நெய்தல் நிலத்துக்குரிய இரங்கல் ஒழுக்கம் கூறப்படுதல்
- பகற்குறி மறுக்கப்பட்டு விரைந்து திருமணம் செய்து கொள்ளுமாறு கூறும் துறையாக அமைவது
- நெய்தல் நில தோழி கூற்றாக பெயர் சுட்டாமல் அமைந்தது
- புன்னை மரம், வலம்புரிச்சங்கு பாற்பொருள் பாணர் முதலான கருப்பொருட்களை கொண்டிருப்பது
- ‘‘நிறைபடு நிழல் பிறவுமலர் உளவே’’ என குறிப்புப் பொருளை கையாண்டு வரைவு கடாவுதலை உணர்த்துதல்

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:05</u>

(i) செய்யுளில் இடம்பெறும் சிறப்புக்களையும் உத்திகளையும் எடுத்துக்காட்டுக.

- தலைவியோடு பகற்குறியில் சந்தித்தலைத் தவிர்த்து, வரைவு கடாவுதலின் அவசியத்தைத் தோழி தலைவனுக்கு உணர்த்துதல்.

www.lkedu.lk

- உறவினராகிய புன்னை நிழற் கீழ் விளையாடி மகிழ்வதற்கு நாணமடைகின்றோம், என்று கூறுவதனால் தலைவன், தலைவி களவு ஒழுக்கத்தை (காதல்) ஊரார் அறிந்து கொள்வதாகிய அலர் தூற்றுதலையும் அதனாற் பகற் குறியிடத்து தலைவனைச் சந்திக்க அஞ்சுவதையும் கூறி,விரைவாகத் தலைவியை மணஞ் செய்து கொள்ளுமாறு தலைவனுக்குத் தோழி கூறுகிறாள்.
- தலைவனது நாட்டுச் சூழலை விபரித்து உரைத்தல்.

= புன்னை மரத்தைக் கருப்பொருளாகக் கொண்டு, குறிப்பால் உணர்த்துதல்.**" நிறைபடு நிழல் பிறவுமா உளவே"** என குறிபெயர்தலைக் குறிப்பிட்டு வரைவு கடாவுதலை உணர்த்துதல்.

= உவமை அணி கையாளப்படல்:" புதிதாய் வந்த பாணர் பாடுகின்ற இசைப் பாடல் போல வெள்ளிய வலம்புரிச் சங்கு ஒலிக்கும்"

= புன்னை மரத்தை கருப்பொருளாகக் கொண்டு , அதன் காரணமாக தலைவி பகற்குறிக்கு அஞ்சுவதைக் குறிப்பிடல்.

= தலைவன் ஊரறியத் திருமணம் செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தல்.

(04 புள்ளிகள்)

(ii) தலைவியை ஒலியெழுப்பும் சங்காக குறிபிட்டதன் கருத்துநிலைபற்றி ஆராய்க.

ஒலியெழுப்பும் வலம் புரிச்சங்கு	**நெய்தல் நிலத்தலைவி**
ஒலியெழுப்புவது	தலைவன் தினமும் பகற்குறியுடன் வருகிறானே அயலவர் பழ் தூற்றுவரே, திருமணத்தை நீட்டிக்குறானே தங்கையை சிறந்தவள் என்கிறார்களே என வருந்தும் தலைவியின்
அபூர்வமான வலம்புரி	அழகும் அபூர்வமானதும்கிடைத்தற்கரியதுமான வெண்ணிறமானதும், கவர்ச்சிகரமானதும் மென்மையும் நிறைந்த பெருமை வாய்ந்தவள்.
கடற்துறைக்கு சொந்தமானது	தலைவி நெய்தல் நில தலைவனுக்கே சொந்தமானவள்.
குறிப்புப் பொருள்:	தனக்கு சொந்தமானதை தான் ஏன் களவு காதலாக பகற்குறியில் அனுபவிக்க வேண்டும் திருமணம் செய்து கொண்டால் மிக உரிமையுடன் சமூக அங்கிகாரத்துடன் சொந்தமாக எப்படியும் எங்கும் அனுபவிக்கலாம் என்ற குறிப்பு பொருள் உணர்த்தப்படுகின்றது.

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- காழ் - புன்னை,விதை,கொட்டை,பருப்பு
- அகைய - வேரூன்றி முளை தோன்ற,தளிர்க்க,முளைக்க,வளர,முளைவிட,வெளிப்பட,துளிர்விட
- விளர் - இளமை,மென்மை
- நரலும் - ஒலிக்கும்,கத்தும்,இசைக்கும்,ஒலியெழுப்பும்,சத்தமிடும்

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

www.ikedu.lk